## செப்டம்பர் - 23 - சனி
### புனித பியோ

**முதல் வாசகம் : 1 திமோத்தி 6 : 13 – 16**

அன்பிற்குரியவரே! அனைத்துக்கும் வாழ்வளிக்கும் கடவுளின் முன்னிலையிலும், பொந்தியு பிலாத்துவின்முன் விசுவாசத்தைச் சிறப்பாக அறிக்கையிட்ட இயேசு கிறிஸ்துவின் முன்னிலையிலும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தோன்றும் வரையில் குறைச் சொல்லுக்கு இடந்தராமல் இந்தக் கட்டளையை அப்பழுக்கின்றிக் கடைப்பிடித்து வா.உரிய காலத்தில் பேரின்பக் கடவுள் அவரைத் தோன்றச் செய்வார். கடவுள் ஒருவரே வேந்தர், அரசருக்கெல்லாம் அரசர், ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர்.அவர் ஒருவரே சாவை அறியாதவர் அணுக முடியாத ஒளியில் வாழ்பவர் அவரைக் கண்டவர் எவருமிலர் காணவும் முடியாது. அவருக்கே என்றென்றும் மாண்பும் ஆற்றலும் உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல் :** மகிழ்ச்சி நிறை பாடலுடன் ஆண்டவர் திருமுன் வாருங்கள்

**நற்செய்தி : லூக்கா 8 : 4 – 15**

அக்காலத்தில் பெரும் திரளான மக்கள் எல்லா ஊர்களிலிருந்தும் அவரிடம் கூடி வந்தபோது அவர் உவமை வாயிலாகக் கூறியது : ”விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைத்தபோது சில விதைகள் வழியோரம் விழுந்து மிதிபட்டன் வானத்துப் பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறு சில விதைகள் பாறைமீது விழுந்தன் அவை முளைத்தபின் ஈரமில்லாததால் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முட்செடிகளின் நடுவே விழுந்தன் கூடவே வளர்ந்த முட்செடிகள் அவற்றை நெருக்கிவிட்டன. இன்னும் சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அவை வளர்ந்து நூறு மடங்கு விளைச்சலைக் கொடுத்தன. ”இவ்வாறு சொன்னபின், ”கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்” என்று உரக்கக் கூறினார். இந்த உவமையின் பொருள் என்ன என்று அவருடைய சீடர் அவரிடம் கேட்டனர். அதற்கு இயேசு கூறியது. ”இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்றவர்களுக்கு எல்லாம் உவமைகள் வாயிலாகவே கூறப்படுகின்றன. எனவே ”அவர்கள் கண்டும் காண்பதில்லை கேட்டும் புரிந்துகொள்வதில்லை.இந்த உவமையின் பொருள் இதுவே. விதை, இறைவார்த்தை. வழியோரம் விழுந்த விதைகள், அவ்வார்த்தைகளைக் கேட்பவர்களுள் சிலரைக் குறிக்கும். அவர்கள் நம்பி மீட்புப் பெறாதவாறு அலகை வந்து அவ்வார்த்தையை அவர்கள் உள்ளத்திலிருந்து எடுத்துவிடுகிறது. பாறைமீது விழுந்த விதைகள், அவ்வார்த்தையைக் கேட்கும்போது அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்பவர்களைக் குறிக்கும். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் சிறிது காலமே அவ்வார்த்தையை நம்புவார்கள் சோதனைக் காலத்தில் நம்பிக்கையை விட்டுவிடுவார்கள். முட்செடிகளுக்குள் விழுந்த விதைகள், வார்த்தையைக் கேட்டும் கவலை, செல்வம், வாழ்வில் வரும் இன்பங்கள் போன்றவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சி அடையாதிருப்பவர்களைக் குறிக்கும். நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்களைக் குறிக்கும்¨ என்றார்..

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நான்கு வகையான விதைகளைப் பற்றிப் பார்க்கின்றோம். இங்கு மூன்றாவது வகையான விதையைப் பற்றிப் பார்க்கும் போது இந்த விதைகள் முற்செடிகள் நடுவே விழுந்தன, கூடவே வளர்ந்த முட்செடிகள் அவற்றை நெருக்கிவிட்டன என்று கூறிய இயேசு, அதற்குரிய பொருளையும் இவ்வாறு கூறுகின்றார். முற்செடிகளுக்குள் விழுந்த விதைகள் வார்த்தையைக் கேட்டும், கவலை, செல்வம் வாழ்வில் வரம் இன்பங்கள் போன்றவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சி அடையாதிருப்பவர்களைக் குறிக்கும். நம்மில் பெரும்பாலானோர் இந்த மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் தானே, நாம் இறைவார்த்தையைக் கேட்கின்றோம். ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இறைவார்த்தை காட்டும் பாதையில் நாம் முதிர்ச்சி அடையவில்லை. காரணம் கவலை, செல்வம் வாழ்வில் வரும் இன்பங்கள் என்கின்றார் ஆண்டவர் இயேசு. இங்கு கவலை என்பது உலகப் போக்கிலான கவலை. எதை உண்போம் எதைக் குடிப்போம் நாளை பற்றிய கவலை, செல்வம் சேர்ப்பது இன்னொரு தடை வாழ்வில் வரும் இன்பங்கள் மூன்றாவது தடை இவை தான் முதிர்ச்சி அடையாமல் நம்மை தடுக்கின்றன என்கின்றார் ஆண்டவர். எனவே உலக இன்பங்களில் நாம் மூழ்கிவிடாமல் இறைவார்த்தை நம்மில் முதிர்ச்சி அடைய செபிப்பதற்கும், இறைபணியில் ஈடுபடுவதற்கும் நம் வாழ்வில் முயற்சி செய்வோம் ஆமென்.